**செ. கு. எண்: 123** **நாள் :3.11.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 3.11.2015

தர்மபுரி மாவட்டம், **ஈச்சம்பாடி அணையின்** வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, **ஈச்சம்பாடி அணையின்** வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் **4.11.2015 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள **6,250 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், **கோமுகி அணையிலிருந்து** பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, **கோமுகி அணையிலிருந்து** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு **4.11.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள **10,860 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**